மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையில் இந்தத் தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு சட்ட மன்றத்தில் ஆதரித்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே அது எல்லாக் கட்சிகளும் சேர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதின் அடையாளம் தான். மீண்டும் தொடர்ந்து பிரதமருக்கு எழுதிக்கொண்டிருக்கிறோம்; எழுதுவோம். உங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து வற்புறுத்துவார்களேயானால் அது நமக்கு உதவியாக இருக்கும்.

(முற்பகல் 10-00)

1980–1981 ஆம் ஆண்டில் தீண்டாமைக் குற்றத்துக்காகத் தொடுக்கப்பட்ட வழக்குகள்.

*வினா எண் 39—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமைக் குற்றத்துக்காக 1980–1981 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தமிழகத்தில் 1980–81 ஆம் ஆண்டில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,996.

(ஆ) தண்டனை வழங்கப்பட்டவை 148.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,996 என்றும் தண்டனை வழங்கப் பட்டவை 148 என்றும் குறிப்பிட்டார்கள். இவ்வளவு குறைவாகத் தண்டனை வழங்கப்பட்டதற்குக் காரணம் என்ன? வழக்கு பதிவு செய்யப்பட்டதிலே ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றனவா? இந்தக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காகப் ''பறக்கும் படை'' ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தப் பறக்கும் படைக்கு வாகன வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, பறக்கும் படை என்பது சரியல்ல. மாவட்டந்தோறும் இயங்கும் காவல்படைகள் உள்ளன. அவற்றிற்கு வாகன வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. வழக்குகளுடைய எண்ணிக்கையைப்பற்றியும் தண்டனை வழங்கப்பட்டவை பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார். வழக்குகளைப் பதிவு செய்வதிலே எந்தவித பிரச்னையும் இல்லை. ஆனால் வழக்குகளைப் பதிவு செய்துவிட்டு, வழக்கு நீதிமன்றத்திற்கோ அல்லது விசாரணைக்கோ வருகின்ற நேரத்தில், புகார் செய்தவர்கள், தங்களுடைய சூழ்நிலையின் காரணமாக, அவர்கள் பதவிகளிலே இருக்கக்கூடியவர்களாக அல்லது அரசுப் பணிகளிலே இருக்கக்கூடியவர்களாக இருப்பார்களானால், தங்களுடைய பணிக்கு ஏதாவது பிரச்னை ஏற்படும் என்ற உணர்வோடு அவர்கள் இதிலே சாட்சி சொல்ல முன் வருவதில்லை. இதனாலேயே பெரும்பாலான வழக்குகள் தள்ளுபடியாகக்கூடிய நிலைமை இருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரையில், இத்தகைய புகார்களைச் சொல்பவர்களுக்குத் தக்க பாதுகாப்பையும் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்வதற்குத் தயாராக இருந்தும்கூட, தவறினைச் சொல்வதற்கு முன்வர அவர்கள் தயக்கம் காட்டுவதே இதற்குக் காரணம்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமைக் குற்றச் சட்டப் பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுகின்ற வழக்குகளில் சாட்சியை நம்பித்தான் தீர்ப்பு வழங்குகிறார்கள். ஆனால் தீண்டாமைக் குற்றத்தைப் பொறுத்த வரையில், சாட்சியைப் பெரிதாக எடுத்துக்கொண்டு தீர்ப்பு வழங்குகிற நிலைமையை மாற்றி, சாட்சி இல்லாமல் அவர்களுக்குத் தண்டனை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா? அடுத்து........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அடுத்து என்று போகக் கூடாது. ஒரு உபகேள்விதான் அனுமதிக்கப்படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கைப் பதிவு செய்துவிட்டு விசாரணைக்கு வருகின்ற நேரத்தில் சாட்சி இல்லாமலேயே தண்டனை அளிக்கக்கூடிய நிலைமை உருவாகுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது சாத்தியம் அல்ல.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்குகள் தோல்வியடைவதற்குச் சாட்சிகள் எல்லாம் கிடைக்காமல் இருப்பது ஒரு காரணம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் புலனாய்வு செய்கின்ற அதிகாரிகளுடைய மனோபாவமும் இதற்கு ஒரு காரணமாக இருக்கிறது என்று பல்வேறு வழக்குகளிலே நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால்,

[1983 சனவரி 28

இந்த வழக்குகளை நடத்துவதற்கு இந்தக் குடியுரிமைச் சட்டத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிற அதிகாரிகளைப் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பதிவு செய்கின்ற அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அதிகாரிகளுடைய நடத்தையின் காரணமாக இந்த வழக்குகள் தோல்வியுறுவதாகவோ அல்லது வழக்குகள் சரிவர நடைபெறவில்லையென்றோ எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் எந்த ஒரு அதிகாரியும் பணியாற்றுவதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால், உறுப்பினரோ, மற்றவர்களோ அரசினுடைய கவனத்திற்கு அதிகாரிகள் நடத்தையைப் பற்றியோ அல்லது கடமை தவறியதைப் பற்றியோ எடுத்துச் சொல்வார்களானால் அதன்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது, அவர்களுடைய சூழ்நிலை காரணமாக சாட்சி சொல்லவரவில்லை, ஆகவேதான் அதிக வழக்குகள் வெற்றி பெற முடியாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், இந்த வழக்குகள் வெற்றி பெறுவதற்காக, 1969 ஆம் ஆண்டிலே மறைந்த முதல்வர் அண்ணா அவர்கள் தாலுகா போர்டுகளை நியமித்து, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அந்த போர்டாரே வழக்குகளை எடுத்து நடத்துவதற்கு ஒத்திருந்தார்கள். ஆனால் அவை இன்றுவரையில் அமல்படுத்தப்படவில்லை என்பது உண்மையா? வருங்காலத்திலேயாவது அந்தத் தாலுக்கா போர்டுகளை நிறுவி அவர்களே கேஸ்களை நடத்துவதற்கான வசதிகளைச் செய்தால், இப்பொழுது உத்தியோகம் கருதி சாட்சி சொல்வதற்கு வராமல் இருக்கின்ற அவல நிலைமை ஏற்படாமல் இருக்கும் என்பதால் அரசு அதைச் செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப்போன்ற விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை என்றாலும், அதிலே இருக்கின்ற சாத்தியக் கூறுகளை, குறிப்பாக குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைத் திறம்பட அமல் படுத்த வேண்டுமென்பதில் மைய அரசின் கருத்தோடு மாநில அரசும் அதே கருத்தைக் கொண்டு இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் நிறைவேற்றித் தமிழகத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகிறது. உறுப்பினரவர்களின் கருத்தும் நிச்சயமாக அரசால் பரிசீலிக்கப் படும்.

1983 சனவரி 28]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண் மிகு பேரவைத் தலைவரவர்களே, தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்காகத் திருச்சியிலே அமைக்கப்பட்டிருக்கும் தனிக் கோர்ட்டுக்கு வருவது என்றால் 50 மைல், 60 மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. எனவே, கேம்ப் கோர்ட்டை டிவிஷனுக்கு இரண்டு நாள் சென்று விசாரிக்கும் வகையில் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவையின் தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்புக் குற்றச்சாட்டுக்களை அல்லது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கு திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மற்றும் மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் இதற்கெனத் தனியாக நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆனால் உறுப்பினரவர்கள் நடமாடும் நீதிமன்றத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அண்மையிலே ஆந்திராவிலே அமைக்கப்பட்டிருப்பது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. தமிழக அரசும் இது குறித்து தமிழகத்திலே தற்போது நடமாடும் நீதிமன்றங்கள் இல்லை என்பதால் சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம்.

*வினா எண் 40—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியில் கூடலூர் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுவசதி மனைக்குரிய இடங்களை ஆர்ஜிதம் செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) கூடலூர் கிராமத்தில் வீடு இல்லாத 125 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக சர்வே எண் 1199, மற்றும் 1196/1, மற்றும் 1197 ஆகியவைகளில் 5.51 ஏக்கர் புஞ்சை நிலங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிட நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துகின்ற சட்டம், 1978 இன் கீழ் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 29-3-80-ல் இழப்பீட்டுத் தொகைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நில உரிமையாளர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்தனர். இதன் பேரில் உயர்நீதிமன்றம் 15-4-80-ல் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது. பின்னர் உயர்நீதிமன்றம் தமிழ்நாடு சட்டம் 1978 ஆம் ஆண்டின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS